ශ්‍රී ලංකා පුස්තකාල සංගමය
ஸ்ரீ லங்கா நூலகச் சங்கம்
Sri Lanka Library Association

**Our Ref:** SLLA/Edu/2020/01

## விசேட அறிவித்தல்

இத்தால் தெரிவிப்பது யாதெனில், 25.01.2020 அன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை நூலகச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்புளோமாக் கற்கைநெறியானது (DIPLIS), 15 பெப்ரவரி 2020 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் உயர் டிப்புளோமா **(HDIPLIS)** என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாற்றத்திற்கு இணையாக இக்கற்கை நெறியின் ஒவ்வொரு மட்டமும் இலங்கைப் பலகலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமத்துடன் (SLQF) இணைக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக தேசிய தொழில் வாண்மைத் தகைமை மட்ட நியமமும் (National Vocational Qualification Framework - NVQF) உசாத்துணைக்காக தரப்பட்டுள்ளது. (பார்க்க : www.ugc.ac.lk/attachments/1156_SLQF_2016_en.pdf, p.11).

இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF) மற்றும் தேசிய தொழில் வாண்மைத் தகைமை மட்ட நியமம் (NVQ) என்பவற்றின் தகைமைகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய மட்டங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| **கற்கை மட்டம்** | **பெறப்படும் தகைமைகள்/பட்டங்கள்** | **தகைமைகளுக்கான சுருக்கக்குறியீடு** | **இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF) தொடர்பாக** | **தேசிய தொழில் வாண்மைத் தகைமை மட்ட நியமம் (NVQ) - இணையானது** |
|---|---|---|---|---|
| மட்டம் I | நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்புளோமா | Dip (Lib Sc) | **இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் 03** | **தேசிய தொழில் வாண்மைத் தகைமை மட்ட நியமம் 05** |
| மட்டம் II* | - | - | - | - |
| மட்டம் III | நூலகமும் தகவல் விஞ்ஞானமும் உயர் டிப்புளோமா | HDip (Lib Sc) | **இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் 04** | **தேசிய தொழில் வாண்மைத் தகைமை மட்ட நியமம 06** |

*** தயவுசெய்து கவனிக்கவும் : மட்டம் 11 மற்றும் மட்டம் 111 என்பவை இணைந்து உயர் டிப்புளோமாவுக்கு பங்களிக்கின்றன.**

**தலைவர்**
**இலங்கை நூலகச் சங்கம்**
**21.02.2020**

Sri Lanaka Library Association
275/75, Prof. Stanley Wijesundara Mw
Colombo 07,
Sri Lanka.

☎ 94 11 2589103
94 11 2589103
slla@sltnet.lk
http://www.slla.org.lk

**President:** Dr. (Ms) Nayana Wijesundara
**Gen. Secretary:** Ms. Lilamani Amarasekara
**Treasurer:** Ms. Waruni Gangabadaarachchi
**Edu. Officer:** Dr. (Ms) Champa Alahakoon

| SLQF மட்டம் | வழங்கப்படும் பட்டம் | NVQ மட்டங்களுடன் ஒப்பிடுதல் |
|---|---|---|
| 12 | கலாநிதிப்பட்டம் / சபைச் சான்றிதழுடனான மருத்துவப் பட்டம் / இலக்கிய கலாநிதி /விஞ்ஞான கலாநிதிப் பட்டம் | |
| 11 | முதுதத்துவமாணிப் பட்டம் | |
| 10 | கற்கைநெறி மற்றும் ஆய்வு நெறியுடன் கூடிய முதுமாணிப் பட்டம் | |
| 9 | கற்கைநெறியுடன் கூடிய முதுமாணிப் பட்டம் | |
| 8 | பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | |
| 7 | பட்டப்பின்படிப்புச் சான்றிதழ் கற்கைநெறி | |
| 6 | சிறப்பு இளமாணிப் பட்டங்கள் | |
| 5 | இளமாணிப் பட்டங்கள் | 7 |
| 4 | உயர் டிப்ளோமா | 6 |
| 3 | டிப்ளோமா | 5 |
| 2 | உயர்தரச் சான்றிதழ் (க.பொ.த உயர்தரம் அல்லது அதற்குச் சமனானது) | 4 |
| 1 | சான்றிதழ் (க. பொ. த சாதாரணதரம் அல்லது அதற்குச் சமனானது) | 3<br>2 |

**அட்டவணை 02**

**கற்றல் பெறுபேறுகள்:**

- ஒரு பாடநெறியின் அல்லது கற்றல் நிகழ்வின் பூர்த்தியின் பின்னர் கற்பவர்கள் எதனை அறிந்து கொள்ள வேண்டும், எதனைப் புரிந்து கொள்ள வேண்டும், எதனைச் செய்துகாட்ட முடியும் என்பதை விபரிக்கும் ஒரு விடயமாகக் கற்றல் பெறுபேறுகள் உள்ளன.

- SLQF இல் கற்றல் பெறுபேறுகள் இரண்டு பகுதிகளாக உள்ளன.

- முதலாவது பகுதியானது, தகைமையாளர்களின் தகைமைசார் பண்புகள் என அழைக்கப்படுகின்றது. இது கற்கைநெறியின் அல்லது ஆய்வுநெறியின் இறுதியில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டான மாணவனிடம் எதிர்பார்க்கப்படுகின்ற